# திருவள்ளூரில் 100 படுக்கை வசதிகளுடன் சித்தா, ஆயுர்வேத சிகிச்சை மையம்: அமைச்சர் நாசர் திறந்தார்

திருவள்ளூர், மே 22–

கொரோனா நோய்த்தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையாக, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், நசரத்பேட்டையில் அமைந்துள்ள 100 படுக்கை வசதிகளுடன் கூடிய சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை மையத்தினை அமைச்சர் சா.மு.நாசர், கலெக்டர் பா.பொன்னையா ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

அப்போது அமைச்சர் சா.மு. நாசர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் கொரனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்று மாவட்டத்தில் முதல்முறையாக மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி துறை சார்பாக, சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை மையத்தினை தொடங்கி வைத்து, மருத்துவமனையில் சித்தா மருத்துவத்திற்கு 50 படுக்கையும், ஆயுர்வேத மருத்துவத்திற்கு 50 படுக்கைகள் என 100 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிகிச்சை மருத்துவ சிகிச்சை மையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த மையத்தில் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். இதனைத்தொடர்ந்து பனிமலர் மருத்துவ கல்லூரியில் 60 ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையத்தை திறந்து வைத்து, அடிப்படை வசதிகளான உணவு, குடிநீர் வசதி, கழிவறை உள்ளிட்ட அனைத்தும் வசதிகளும் உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டது.

தொண்டு நிறுவனம் சார்பாக மாவட்டம் முழுவதிலும், சுமார் 1000 ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள் பயன்பாட்டிற்கு வரப்பெறும். முதலமைச்சரின் பெருமுயற்சியால் கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கம் படிப்படியாக கட்டுக்குள் கொண்டு வரப்படும். மேலும் பொதுமக்கள் அரசின் வழிமுறைகளை தவறாது பின்பற்றி தங்களை தொற்றிலிருந்து காத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இ வ் வ ா ய் வின் போ து பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் சி.வி.ரவிச்சந்திரன், இணை இயக்குநர் (குடும்ப நலம் (ம) ஊரகநலப்பணிகள்) மரு.ராணி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜவஹர்லால், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அய்யாசாமி, முதுநிலை உதவி சித்த மருத்துவ அலுவலர் ஈஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரத்தில், பவ்டா சார்பில் மூதாட்டிகளுக்கு நிவாரண பொருட்களை அமைச்சர் பொன்முடி வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் லட்சுமணன், புகழேந்தி, பவ்டா நிர்வாக இயக்குனர் ஜாஸ்லின் தம்பி உள்பட பலர் உடன் உள்ளனர்.

# தளர்வுகள் இல்லாத ஊரடங்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நம் அனைவருக்கும் இருக்கிறது.

கட்சி எல்லைகளைக் கடந்து நாம் இங்கு கூடியிருக்கிறோம். நம் அனைவரது ஒரே நோக்கம் கொரோனா ஒழிப்பு என்பதாக மட்டும் தான் இருக்க வேண்டும்!

**ஆலோசனைகளை கேட்டபின்...**

கடந்த 13ந்தேதி அன்றும் இதேபோல் அனைத்துச் சட்டமன்றக் கட்சிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு உங்கள் கருத்துகளையும் மருத்துவ ஆலோசனைக் குழுவின் கருத்துகளையும் கேட்டபிறகு ஊரடங்கு குறித்தான சில விதிமுறைகளை வகுத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தது தமிழக அரசு.

அந்த நடைமுறைகளில் சற்று மாற்றங்களை பொதுமக்களின் நலன் கருதியும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், 17.5.2021 முதல் கூடுதலாக சில கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருகிறது. இது வரும் 24.5.2021 அன்று முடிவுக்கு வருகிறது.

கொ ரோ ன ா வை க் கட்டுப்படுத்துவதற்கு, அதன் பரவல் சங்கிலியை உடைப்பதே முக்கியமானது. அந்தச் சங்கிலியை உடைப்பதற்காகவே முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இந்த முழு ஊரடங்கு குறித்த அடுத்தகட்ட முடிவுகளை எடுப்பதற்காகத்தான் இந்த ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது என்பதை முதலில் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு தீவிரமான நடவடிக்கை களை எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் விவரங்களைச் சுருக்கமாக உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதில் முக்கியமானது ஆக்சிஜன் தேவை ஆகும். ஆக்சிஜன் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதை தமிழக அரசு தனது மிக முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

★ ஆக்சிஜன் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் தமிழக அரசு கேட்டுக் கொண்டதன்படி, தமிழகத்திற்கான 480 மெட்ரிக் டன் ஆக்சிஜன் ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசு 519 மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளது.

**ஒடிசாவிலேயே தங்கி...**

★ ஒடிசா மாநிலத்திலிருந்து தினந்தோறும் 100 மெட்ரிக் டன் ஆக்சிஜன் பெறப்பட்டு வருகிறது. விமானங்கள் மூலம் காலி டேங்கர்கள் அனுப்பப்பட்டு இரயில்கள் மூலம் ஆக்சிஜன் சிலிண்டர்கள் பெறப்பட்டு வருகின்றன.

★ ஒடிசா மாநிலத்திலிருந்து விநியோகிக்கப்படும் ஆக்சிஜனை உரிய முறையில் பெறும் பணிகளை தமிழகத்தைத் சேர்ந்த இரண்டு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஒடிசாவிலேயே தங்கி மேற்பார்வைப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

★ மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்தும் 900 மெட்ரிக் டன் அளவிலான ஆக்சிஜன் பெறுவதற்கு தமிழ்நாடு அரசு அம்மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இது தற்போது அம்மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காகவும் தனியே ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நியமிக்கப்பட்டு அவர் மகாராஷ்டிராவிலேயே தங்கி மேற்பார்வை பணிகளை மேற்கொள்ளவுள்ளார்.

★ தமிழ்நாட்டிலேயே டிட்கோ மூலம் இதர தொழில் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியில் இணைந்து ஆக்சிஜன் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ மனித உயிர்களைக் காக்கும் சாதனங்களை ரூபாய் 40 கோடி செலவில் இறக்குமதி செய்ய தொழில்துறை ஏற்பாடு செய்துள்ளது. இதில், ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர், ரெகுலேட்டர், ப்ளோமீட்டர்ஸ் மற்றும் ஆக்சிஜனை நிரப்பிவைக்கும் உறைநிலை சேமிப்புக் கலன்கள் ஆகியவை உள்ளடங்கும்.

**வெளிநாடுகளிலிருந்து...**

★ சிங்கப்பூரிலிருந்து 2150 சிலிண்டர்களை வாங்குவதற்கு சிப்காட் மூலமும், 1000 சிலிண்டர்கள் சிஐஐ மூலமும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், துபாயிலிருந்து 800, தென்கொரியாவிலிருந்து 975, மலேசியாவிலிருந்து 380 சிலிண்டர்களும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

★ ரூபாய் 22 கோடி செலவில் 2675 ஆக்சிஜன் செறிவூட்டிகளை சென்னை மாநகராட்சி மூலம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சிங்கப்பூரிலிருந்து ரூபாய் 20 கோடி செலவில் 5000 செறிவூட்டிகளையும், லெபனானிலிருந்து 185 செறிவூட்டிகளையும் வாங்குவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ உலக வங்கியின் மூலமாக 2000 ஆக்சிஜன் செறிவூட்டிகள் கடன் அடிப்படையில் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் 2000 செறிவூட்டிகளையும் உலக சுகாதார நிறுவனம் 100 செறிவூட்டிகளையும் வழங்க முன்வந்துள்ளன.

★ சிங்கப்பூரிலிருந்து 2630 ரெகுலேட்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் 1780 ரெகுலேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

★ சிங்கப்பூரிலிருந்து கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்ட 3250 ப்ளோ மீட்டர்களில், தற்போது 250 ப்ளோ மீட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

★ பல்வேறு மாவட்டங்களில் 156 மினி ஆக்சிஜன் தயாரிக்கும் கூடங்கள் அமைக்க பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

★ ரூபாய் 23 கோடி செலவில் 12 கிரையோஜெனிக்ஸ் டேங்குகள் சீனாவிடமிருந்தும், 5 டேங்குகள் தைவானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

★ ஆக்சிஜன் ஆப்டிமைசர் என்ற சாதனத்தின் மூலம் ஆக்சிஜன் உபயோகம் அரசு மருத்துவமனைகளில் குறைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு 30 சதவிகிதம் மூலதன மானியம் வழங்க அரசு அறிவித்துள்ளது. ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை உள்ள காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய நிறுவனங்களுக்கு இம்மானியம் கிடைக்கும். நவம்பர் 30க்குள் குறைந்தபட்சம் 10 மெட்ரிக் டன் அளவில் ஆக்சிஜன் தயாரிக்க முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு ஐந்தாண்டுகளில் 30 சதவிகிதம் மூலதன மானியம் வழங்கப்படும். இவ்வாறு தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் 6 சதவிகித வட்டி மற்றும் மானியத்துடன் உடனடியாக கடனுதவி வழங்கும்.

★ ஐநாக்ஸ் நிறுவனம் மூலம் ஒசூரில் திரவ ஆக்சிஜன் கூடுதலாகத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★ சிக்கில்சால் நிறுவனம் ரூபாய் 100 கோடி செலவில் ராணிப்பேட்டையில் உள்ள தனது ஆக்சிஜன் தயாரிக்கும் நிறுவனத்தினை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது.

**தமிழகத்திற்கு கூடுதல் ஒதுக்கீடு**

★ தற்போது ஒடிசாவிலிருந்து தமிழகத்திற்கு ஆக்சிஜன் பெறப்பட்டு வருகிறது. அங்கு வீசிய புயல் காரணமாக தொடர்ந்து ஆக்சிஜன் பெறப்படுவதில் தாமதம் ஏற்படும் நிலையில், உடனடியாக மகாராஷ்டிராவிலிருந்து ஆக்சிஜன் வழங்க வேண்டி ஒரு அவசரக் கடிதத்தை நான் மத்திய அமைச்சர் பியூஷ் கோயலுக்கு எழுதினேன். அக்கடிதத்தை தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நேரில் சென்று வழங்கி, தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக 900 மெட்ரிக் டன் ஆக்சிஜன் ஒதுக்கீடு செய்ய வேண்டுகோள் விடுத்தார். அதனை உடனடியாக ஏற்று, மத்திய ரெயில்வே துறை அமைச்சர் பியூஸ் கோயல் தமிழகத்திற்கு கூடுதல் ஒதுக்கீட்டை வழங்கிட உத்தரவாதம் அளித்துள்ளார்.

இப்படி ஆக்சிஜன் தட்டுப்பாட்டை நீக்க பெருமளவிலான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான ஆக்சிஜன் இருப்பு உள்ளதை உறுதி செய்திருக்கிறோம்.

இன்னொரு பக்கத்தில் மருத்துவ உள்கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளையும் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய சூழலில் கடந்த 10–ந்தேதி முதல் 24–ந்தேதி வரையிலான முழு ஊரடங்கு காலம் முடிய இருக்கிறது.

**கட்டுக்குள் வரவில்லை**

கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்று கேட்டால், குறைந்துள்ளதே தவிர கட்டுக்குள் இன்னும் வரவில்லை என்றே தான் சொல்ல முடியும்.

முழு ஊரடங்கு பிறப்பிக்கும் போது பொதுமக்களின் நன்மைக்காக சில தளர்வுகளை நாம் அறிவிக்கிறோம். தேவையான மளிகை, காய்கறிகளை வாங்கிக் கொள்வதற்காக மட்டுமே அந்தத் தளர்வுகளை அறிவித்தோம். ஆனால் அந்தத் தளர்வுகளைப் பயன்படுத்தி அவசியமில்லாமல் வெளியில் சுற்றுவதும் சிலருக்கு வழக்கம் ஆகிவிட்டது. இப்படி வருபவர்களை அறிவுரை சொல்லி அனுப்பி வையுங்கள் என்று காவல்துறைக்கு உத்தரவிட்டோம். அத்தகைய அன்பான அறிவுரைகளையும் சிலர் கேட்பதாகத் தெரியவில்லை.

முழு ஊரடங்கு என்பது பொதுமக்களின் நன்மைக்காகத் தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் உயிர்களைக் காக்கவே, பாதுகாக்கவே போடப்பட்டுள்ளது. அதனை உணராதவர்களாக பொதுமக்களில் சிலர் இருப்பது வேதனை தருகிறது.

**விடுமுறைக் காலம் அல்ல...**

முழு ஊரடங்கை சிலர், ஏதோ விடுமுறைக் காலம் என்பதாக நினைத்து ஊர் சுற்றி வருகிறார்கள். இது விடுமுறைக் காலம் அல்ல, கொரோனா காலம் என்பதை உணராமல் இன்னமும் சிலர் இருக்கிறார்கள்.

'கொரோனாவை வாங்கிக் கொள்ளவும் மாட்டேன் – கொரோனாவை அடுத்தவருக்கு கொடுக்கவும் மாட்டேன்' என்று பொதுமக்கள் உறுதி எடுத்துக் கொண்டால் மட்டும் தான் இந்த நோய் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இதனை உணர்த்துவதற்காகத் தான் பல்வேறு திரையுலகக் கலைஞர்களை வைத்து விழிப்புணர்வு வீடியோக்களைத் தயாரித்து பொதுமக்களுக்குச் சொல்லி வருகிறோம்.

கொரோனா குறித்த பயம், பொதுமக்களின் பேச்சில் தெரிகிறது. ஆனால் அது செயலில் தெரிய வேண்டும். அத்தகைய எச்சரிக்கை உணர்வை இன்னமும் பொதுமக்களிடம் விதைத்தாக வேண்டும்.

கடந்த ஓராண்டு காலத்தில் விலைமதிப்பில்லாத மனித உயிர்களை இழந்துள்ளோம். இதனால் எத்தனையோ குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக ஆகி உள்ளது. இத்தகைய இழப்புகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

கடந்த ஓராண்டு காலத்தில் நம்முடைய மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள் அடைந்துள்ள துன்ப துயரங்கள் அளவில்லாதது. ஏராளமான மருத்துவர்களை நாம் இழந்துள்ளோம். மருத்துவத்துறையே மிகப்பெரிய மனரீதியான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. தங்களது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு இதற்கு மேலும் சுமையை, அழுத்தத்தைக் கொடுக்க முடியாது.

**எத்தனை மாதம் பள்ளிகளை மூடுவது?**

கொரோனா காரணமான மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பவர்கள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள். அவர்களுக்கு விடுமுறை என்பது மகிழ்ச்சிக்குரிய காலமாக இருந்தது, இப்போது மிகப் பெரிய துன்பம் தருவதாக மாறிவிட்டது.மன அழுத்தம் கொண்டவர்களாக அவர்கள் மாறிவிடக் கூடும். இன்னும் எத்தனை மாதங்கள் பள்ளி, கல்லூரிகளை மூடி வைத்திருக்க முடியும்?அவர்களுக்கு விரைவில் கல்வியையும் எதிர் காலத்தையும் உருவாக்கித் தந்தாக வேண்டும்.

இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இங்கு வருவதற்கு முன்பாக, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன். அதில் அவர்களது ஒருமித்த கருத்தாக, தளர்வுகளற்ற ஊரடங்கினை முழுமையாக, தீவிரமாக அமல்படுத்தினால் மட்டுமே, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த இயலும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

மாவட்டங்களில் நான் மேற்கொண்ட பயணங்களின் போதும், இதே கருத்து பரவலாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்படி சூழ்நிலையில், தளர்வுகளற்ற முழு ஊரடங்கை அமல்படுத்துவது குறித்த முடிவினை அரசு எடுக்க வேண்டியுள்ளது.

நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே உங்கள் அனைவரது ஆலோசனைகளையும் பெற்று, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, தற்போதைய நிலையில், காலத்தின் அருமை கருதி, வருகை புரிந்திருக்கும் உறுப்பினர்கள், ஊரடங்கு குறித்த தங்களது மேலான கருத்துகளை மட்டும் குறிப்பாகத் தெரிவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

**அண்ணா தி.மு.க.**

அத்தியாவசிய பணிகளுக்கு மட்டுமே அனுமதி தந்து பொது முடக்கத்தை நீட்டிக்க வேண்டும் என அண்ணா தி.மு.க. பிரதிநிதி டாக்டர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஆலோசனை கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் (அண்ணா தி.மு.க.) பால், காய்கறி, மருந்தகம் போன்ற அத்தியாவசிய கடைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்க வேண்டும். நடமாடும் வண்டிகள் மூலம் மக்களின் வீடுகளுக்கே சென்று காய்கறி விற்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# கொரோனா பாதித்து வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட 8 பேர் விதிமுறைகளை மீறி வெளியில் நடமாட்டம்: ரூ. 16 ஆயிரம் அபராதம் வசூல்

சென்னை, மே 22–

பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டு தனிமைபடுத்தப்பட்டவர்களில் விதிகளை மீறி வெளியே நடமாடிய 8 நபர்களிடமிருந்து ரூ.16 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக கமிஷனர் ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களில் ஒருசிலர் மற்றும் அவர்களது குடும்பத்தார் வீடுகளைவிட்டு வெளியே வருவதாக புகார்கள் பெறப்பட்டுள்ளன. தொற்று பாதித்த நபர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் வெளியே நடமாடுவது கண்டறியப்பட்டால் அவர்களிடமிருந்து முதன்முறை ரூ.2000 அபராதம் வசூலிக்கவும், அதனையும்மீறி மீண்டும் வீடுகளை விட்டு வெளியில் வரும் நபர்களை பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் கொரேனா பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக புகார்கள் தெரிவிக்க 044 25384520 என்ற தொலைபேசி எண் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இதுவரை பெறப்பட்ட 22 புகார்கள் மீது வருவாய்துறை அலுவலர்களின் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், 12 புகார்களில் விதி மீறல் இல்லை எனவும், 2 நோயாளிகள் உடல்நல பாதிப்பால் மருத்துவமனையில் அனுமதிப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

மீதமுள்ள 8 நபர்களிடமிருந்து தலா ரூ. 2 ஆயிரம் வீதம் ரூ. 16 ஆயிரம் அபராதமாக வசூலிக்கப்பட்டு, அவர்கள் இனிவரும் நாட்களில் வெளியே வரக்கூடாது மீறினால் கொரேனா பாதுகாப்பு மையத்திற்கு (COVID CARE CENTRE) அழைத்துச் செல்லப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கமிஷனர் கூறியுள்ளார்.

# முதல்வர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மன நலம் பாதிக்கப்பட்ட வாலிபர்

## பெற்றோரை அழைத்து போலீசார் எச்சரித்தனர்

**சென்னை, மே 22–**

**முதல்வர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தவர் மன நலம் பாதிக்கப்பட்ட வாலிபர் என்பது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து பெற்றோரை அழைத்து போலீசார் எச்சரித்து அனுப்பி வைத்தானர்.**

சென்னை எழும்பூரில் தமிழக காவல்துறையின் தலைமை கட்டுப்பாட்டு அறை தொலைபேசிக்கு நேற்று காலை 10 மணியளவில் வந்த அழைப்பில் பேசியவர், ஆழ்வார்பேட்டை சித்தரஞ்சன் சாலையில் உள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும், அது சிறிது நேரத்தில் வெடிக்கும் என கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்துவிட்டார்.

இதையடுத்து ஸ்டாலின் வீட்டில் சோதனை நடத்துவதற்கு உயர் அதிகாரிகள் உத்தரவிட்டனர். வெடிகுண்டு தடுப்புப் பிரிவு போலீஸார் மோப்ப நாய்களுடன் ஸ்டாலின் வீட்டுக்குச் சென்று சோதனை செய்தனர். பல மணிநேரம் நடைபெற்ற இச் சோதனையில், அங்கிருந்து எந்த வெடிபொருளும் கண்டெடுக்கப்படவில்லை. இதனால் வதந்தியை பரப்பும் நோக்கில், அந்த அழைப்பு வந்திருப்பது போலீஸாருக்கு தெரியவந்தது.

இது தொடர்பாக தேனாம்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை செய்தனர். மிரட்டல் விடுத்த செல் போன் எண் குறித்து சைபர் குற்றப்பிரிவு போலீஸார் உதவியுடன் தேனாம்பேட்டை போலீஸார் விசாரணை செய்தனர். விசாரணையில், வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியைச் சேர்ந்த புவனேஷ்வர் (26) என்பதும், அவர் மன நலம் பாதிக்கப்பட்டவர் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து போலீஸார், அவரது பெற்றோரை அழைத்து எச்சரித்து அனுப்பினர்.

இவர் ஏற்கெனவே, கடந்தாண்டு முன்னாள் முதல்வர் பழனிசாமி வீடு, புதுச்சேரி முதல்வர் வீடு, நடிகர்கள், ரஜினி, விஜய், அஜித் வீடு உள்பட பல்வேறு முக்கிய நபர்களின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தவர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.


**OBITUARY**



**C.P.SEETHAPATHI (86 Years)**
Administrative Officer, PWD (Retd.)
Attained the lotus feet of Lord Naryana on 16-05-2021
Deeply mourned by
Daughters, Grandchildren, Family & Friends
Cell: 99520 90526, 94432 46577

**ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்**

CIN: L36999TN1961PLC004606
பதிவு அலுவலகம்: ''எஸ்வின் ஹவுஸ்'', 13, பழைய மகாபலிபுரம் ரோடு, பெருங்குடி, சென்னை–600 096.
தொலைபேசி: 044–24960335/39279318/43063545
பேக்ஸ்: 044–24961785.
இமெயில்: hebcnn@highenergy.co.in.
வெப்: www.highenergy.co.in.

**அறிவிப்பு**

இதர அலுவல்களுக்கு இடையே, 31 மார்ச் 2021ல் முடிந்த காலாண்டு/ஆண்டிற்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டம் சனிக்கிழமை, 29 மே 2021 அன்று நடைபெறுகிறது.

ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்டுக்காக
இடம்: சென்னை–96
தேதி: 21.05.2021
எஸ்.வி. ராஜு
கம்பெனி செயலாளர்


**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Krishen.M, S/o. Minorsamy.N, aged 23 years, permanently residing at No.3A, Block, Inspector Qurts, Jermiah Road, Vepery, Near G1 Police Station, Vepery High Road, Chennai – 600 007. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Krishen.M**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Sam Aristo.S, S/o. Velan.Subramani, aged 23 years, permanently residing at No.5/25, First Floor, PTC Officers Colony, 1st Main Road, Maduravoyal, Chennai –600 095. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Sam Aristo.S**

**எல்நெட் டெக்னாலஜிஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : TS 140, பிளாக் எண். 2 & 9, ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை – 600 113
Ph : 044–2254 1337/1098 | Fax : 044 - 2254 1955
Email : elnetcity@gmail.com Website: www elnettechnologoies.com
CIN : L72300TN1990PLC019459

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்றுதல்**

கம்பெனிகள் சட்டம், 2013 (சட்டம்) விதிகளின் பிரிவு 124(6) மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப பெறுதல்) விதிகள், 2016 (விதிகள்)க்கு இணங்க, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக ஈவுத்தொகையை கோராமல் இருக்கும்பட்சத்தில் கம்பெனியின் சமபங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியின் ('ஐஇபிஎப்') டீமேட் கணக்கிற்கு கம்பெனியால் மாற்றப்பட வேண்டி உள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த 2013–14–ம் ஆண்டு கம்பெனியால் அறிவிக்கப்பட்ட இறுதி ஈவுத் தொகையில் இருந்து கடந்த ஏழு ஆண்டுகளாக ஈவுத்தொகை(கள்) பெறப்படாமல்/கோரப்படாமல் கம்பெனியில் பங்குதாரர்கள் வைத்திருக்கும் அத்தகைய பங்குகள் நிலுவைத் தேதியான **20 ஆகஸ்ட், 2021**–க்குள் ஐஇபிஎப் ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு மாற்றப்பட உள்ளது.

மேற்கண்ட பங்குகள் மற்றும் கோரப்படாத ஈவுத்தொகையை கோர விரும்பினால், அது ஐஇபிஎப் கணக்கில் மாற்றப்படுவதற்கு முன், அதனுடன் தொடர்புடைய கீழ்க்கண்ட நகல் ஆவணங்களை பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான (ஆர்டிஏ) மெசர்ஸ் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டிற்கு பங்குதாரர்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

★ ''ஐஇபிஎப் ஆணையத்திற்கு பங்குகளை மாற்றக்கூடாது'' என்னும் கோரிக்கை கடிதம்
★ சுய சான்றொப்பமிடப்பட்ட பான் கார்டு நகல் மற்றும் முகவரிக்கான ஆதாரம்
★ ரத்து செய்யப்பட்ட காசோலை நகல்

மேற்கண்ட விதிகளின்படி தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக, யாருடைய பங்குகள் ஐஇபிஎப் கணக்கிற்கு மாற்றப்பட உள்ளதோ அது சம்பந்தமான பங்குதாரர்களுக்கு அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்புடைய விதிகளின்படி, கம்பெனி ஏற்கனவே தனித்தனி மின்னஞ்சல்களை அனுப்பி உள்ளது. கோவிட் – 19 தொற்றுநோய் காரணமாக, தமிழகத்தில் முழு ஊரடங்கு அமலில் உள்ளது. இதன் காரணமாக மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத/கிடைக்காத இது சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு இந்த தகவலை கம்பெனியால் வழங்க முடியவில்லை. எனவே கம்பெனிகள் சட்டம் 2013–ன் பரிந்துரைக்கப்பட்ட விதிகளின் கீழ் பதிவுத் தபாலில் அனுப்பும் நடவடிக்கையை கம்பெனி மேற்கொள்ளும். பங்குகளை மாற்றுவதற்கான நிலுவைத் தேதிக்கு முன் தொற்று நிலைமை சீரடைந்து இயல்பு நிலைக்கு திரும்பினால், இது சம்பந்தப்பட்ட விவரம் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு பதிவுத் தபால் மூலம் வழங்கப்படும்

இதற்கிடையே கம்பெனி, நிதி ஆண்டு 2013–14 முதல் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் ஈவுத் தொகை வழங்கப்படாத/பெறப்படாத பங்குதாரர்கள் தொடர்புடைய விவரங்களை அதன் இணையதளம் www.elnettechnologies.com–ல் கீழ்க்கண்ட investor/compliance/ unpaid dividend data/year 2021/Details of shares proposed to be transferred to IEPF 2013–14 என்ற பிரிவில் பதிவேற்றம் செய்துள்ளது.

யாருடைய ஃபோலியோ மற்றும் பிற விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்தில் கூறப்பட்ட பிரிவில் உள்ளதோ அது மேற்கூறிய விதிமுறைகளின் அடிப்படையில் அந்த பங்குகளை ஐஇபிஎப்–க்கு மாற்ற நிறுவனம் கடமைப்பட்டுள்ளது என்பதை இது சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கூறிய நிலுவைத் தேதிக்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களால் ஈவுத்தொகை கோரப்படாவிட்டால், பின்வரும் விஷயத்தில் மேலதிக அறிவிப்பு இல்லாமல் சம்பந்தப்பட்ட பங்குதாரர் வைத்திருக்கும் பங்குகளை ஐஇபிஎப்–க்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் கம்பெனியால் தொடங்கப்படும்.

இந்த விதமான பங்குகள் வைத்திருந்தால்:

★ **காகித வடிவில் :** புதிய பங்கு சான்றிதழ்(கள்) வெளியிடப்பட்டு, பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும். பங்குதாரர் பெயரில் பதிவு செய்யப்பட்ட அசல் பங்கு பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும் மற்றும் பேச்சுவார்த்தைக்கு உடன்படாததாகவும் கருதப்படும்.

★ **டீமேட் வடிவில் :** டீமேட் வடிவில் உள்ள பங்குகளை ஐஇபிஎப் கணக்கிற்கு மாற்றுவது தொடர்பான கார்ப்பரேட் நடவடிக்கை குறித்து வைப்பாளரிடம் கம்பெனி தெரிவிக்கும்.

ஐஇபிஎப்–க்கு பங்குகள் மற்றும் கோரப்படாத ஈவுத்தொகைகள் மாற்றப்பட்டால், சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் அவற்றை ஐஇபிஎப் ஆணையத்திடம் இருந்து கோர, அதன் இணையதளம் www.iepf.gov.in–ல் உள்ள பரிந்துரைக்கப்பட்ட படிவம் ஐஇபிஎப் – 5ஐ ஆன்லைனில் முறையாக சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மேலும் தெளிவுபடுத்தல்களுக்கு, இது சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான (ஆர்டிஏ) மெசர்ஸ் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், யூனிட் : எல்நெட் டெக்னாலஜிஸ் லிமிடெட் 'சுப்ரமணியன் பில்டிங்', 5வது தளம், எண். 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை–600 002, தொலைபேசி எண்:91–44–2846 0390 to 395; Fax: 91–44–2846 0129. Email: investor@cameoindia.comல் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள
எல்நெட் டெக்னாலஜிஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
E. காமாட்சி
தலைமை நிதி அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 22.05.2021